# பக்திப்பாசுரங்கள்



கவிஞர் ரஜிதா அரிச்சந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்திப்பாசுரங்கள்

கவிஞர்
ரஜிதா அரிச்சந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


நூலின் பெயர் : பக்திப் பாசுரங்கள்

ஆசிரியர் : கவிஞர் ரஜிதா அரிச்சந்திரன்

பதிப்புரிமை : ஆசிரியருக்கு

வெளியீடு : 2022 செப்டெம்பர்

பக்கங்கள் : VII+40

அளவு : B6

ISBN : 978-624-98909-3-0

பதிப்பு : மெகா பதிப்பகம் 021 221 7939

**Title** : Bakthippasuranhal...

**Author** : Rajitha Arichandiran

**Copy Rights** : Author

**Pages** : vii + 40

**Price** : Rs.500

**Print** : September, 2022



**Contact** : No.110, New Senkuntha Road,
Thirunelvely East, Jaffna.
Mobile No: +94777925326



ISBN : 978-624-98909-3-0





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை



என்னுடைய இரண்டாவது நூலாகிய "பக்திப் பாசுரங்கள்" எனக்கும் இறைவனுக்கு மான ஈர்ப்பினாலும் அவர் மீது நான் கொண்ட காதலாலும் எழுந்தவை. இவை அனைத்தும் என்னுள் இருக்கும் ஆண்டவன் தூண்டுதலால் தான் சாத்திய மாயின அவர் தூண்டத் தூண்டத்தான் நான் துலங்கினேனே தவிர வேறொன்றும் இல்லை. எல்லாம் அவனே என்னுள் இருக்கும் அவன்தான் அவனைப்பாட வைத்தான். 'அகம்பிரமாஸ்மி" என்னுள் அவன் எனும் உபநிடத தத்துவத்தை ஆணித்தரமாக நம்புபவள் நான் அதையே உங்களுக்கு இந்நூலின் மூலமாக கூறுகிறேன்.

தமிழிலக்கிய வரலாற்றில் பக்திப்பாசுரங்கள் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன. அந்தவகையில் ஒவ்வொரு காலப் பகுதியிலும் பக்தி இலக்கியங்கள் சிறப்புப் பெற்று வந்துள்ளது. எங்களை ஆட்டி வைக்கும் இறைவன் மீதும் அவனின் பல நாமங்களின் மீதும் என்னால் பாடப்பட்ட இந்நூலை வெளியிடுவதற்கு இறைவன் அருளால் என்னுடன் நின்றுழைத்து வழிநடத்திய இயற்கை, வாழ்த்துரை நல்கிய என்னுடைய மரபு ஆசிரியர் முனைவர் சரஸ்வதி பாஸ்கரன் அவர்களுக்கும் இந்நூலை அழகுற அச்சிட்டுத்தந்த மெகா நிறுவனத்திற்கு என்றன் முதல் நூலை ஆதரித்த வாசகர்கள் அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்வடைகின்றேன்.

**என்றும் அன்புடன்**
**கவிஞர் ரஜிதா அரிச்சந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை



இந்நூலின் ஆசிரியர் மரபுமணி ரஜிதா அரிச்சந்திரன் அவர்கள் என் மரபு மாணாக்கர். விரைவில் மரபினைக் கற்றுக் கொண்டு பாக்கள் இயற்றுவதில் வல்லவர். இப்படிப்பட்ட சிறப்பிற்குரிய நூலாசிரியர். ரஜிதா அரிச்சந்திரன் அவர்கள் பக்தி பரவசத்துடன் எழுதிய இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கு வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

முதல் பாடலே "வெள்ளைப் பிள்ளையார்" என்னும் தலைப்பின் கீழ் அமைந்து எல்லோராலும் விரும்பப்படுகின்ற ஆனைமுகத்தானைப் போற்றிப் பாடுவதாக அமைத்துள்ள திலிருந்தே நூலாசிரியரின் இறைபற்றினை அறிய முடிகிறது.

"என்பும் உன்னை நினைக்குமே
எங்கள் இறைவா வெள்ளையனே" என்னும் வரிகளில் அவரது எலும்பு கூட இறைசிந்தனையோடு இருப்பதனைப் புலப்படுத்துகிறது.

நாகபூசணி அம்மன் பாடலில் அன்னையின் கருணை வெள்ளம் காட்டாறாகப் பொங்கிப் பிரவாகமாய்ப் பொழியும் என்று கூறியுள்ள பாங்கு மிகச் சிறப்பு.

"ஈழ புரியை நோக்குகின்ற
ஈட்டி எல்லாம் உடைந்தேபோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீழ்த்த முடியா வீரத்தால்
வீறு கொள்ளும் முருகனாலே " என்றும்
"தீவின் சிரசில் அமர்ந்திருந்தே
தீமை அழிக்கும் ஆறுமுகன் என்றும்

நல்லூர் முருகனைப் போற்றிப் பாடும் வரிகளில் அவரின் தாய்நாட்டுப்பற்று மிளிர்கிறது என்றால் அது மிகையில்லை.கந்தனைப் பாடும் பாடலில்"தந்தைக் குபதே சத்தினையே தந்த மைந்தர்....... என்றும் திருமாலைப் பாடுமிடத்தில்

"மண்ணில் மூன்று அடிகேட்டே
மண்ணுள் அரக்கர் அகம்பாவம்

மண்ணாக்கினாயே வாமனனாய் என்றும் தொன்மங்களைப் பதிவு செய்துள்ளார்.

மேலும், நல்லூரில் வீற்றிருக்கும் சட்டநாத சிவன், கொன்றலடி ஞான வைரவர், ஆஞ்சநேயர், வேளாதோப்பு முத்துமாரியம்மன் என்ற தெய்வங்களின் மீதும் பாடல்கள் இயற்றியுள்ள பாங்கு இவரின் இறைபக்திக்குச் சான்றாகும்.

வீரம், செல்வம், கல்வி இவற்றிற்குக் காரணமாக விளங்குகின்ற மலைமகள், அலைமகள், கலைமகள் மூவருக்கும் பாடல்கள் எழுதியுள்ளார்.

கலைமகளைப் போற்றிப்பாடும் இடத்தில்

"ஆய கலைகள் அனைத்தையும்
ஆத்தா உன்னுள் அடக்கினாயே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஈயல் புரிந்தே எம்மையுமே
ஈட்டி எனவே உருவாக்கிடு"

என்று இறைஞ்சுகிறார். காவடிச் சிந்துவின் அமைப்பிலே செங்குந்த குளநகர் முருகனைப் போற்றிப் பாடியுள்ளார் ஆசிரியர்.

இவ்வாறு பற்பல தெய்வங்களையும் வாழ்த்தியும் வேண்டியும் இறைஞ்சுகின்ற பாங்கு பாராட்டுதலுக்கும் போற்றுதலுக்கும் உரியது என்பதில் ஐயமில்லை. ஆசிரியர் மேன்மேலும் பல நல்ல நூல்களை வெளியிட்டுச் சிறக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைமையை வேண்டி வாழ்த்துகிறேன்.

என்றும் அன்புடன்
**முனைவர் பாவலர் சரஸ்வதி பாஸ்கரன்**
திருச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழுக்குள்


- வெள்ளைப் பிள்ளையார்
- நாகபூசணி அம்மன்
- நல்லூர் முருகன்
- முருகா
- நல்லூர்க் கந்தன்
- அலங்காரக்கந்தன்
- நல்லூர்க் கந்தன்
- நல்லூர் முருகா
- அழகுக் கந்தா
- சட்டநாத சிவன்
- கொன்றலடி ஞான வைரவர்
- திருநெல்வேலி வாலையம்மன்
- துர்க்கை
- இலக்குமி
- சரஸ்வதி
- திருமால்
- ஆஞ்சநேயர்
- வேளாதோப்பு முத்துமாரி அம்மன்
- காவடியாட்டம்
- செங்குந்த குளநகர்
- ஞானக் குழந்தை
- மயில் மீதேறி வந்த...
- முத்தமிழ் வடிவனே...
- சந்நிதிக்கந்தன்
- வெற்றி முருகன்
- சந்நிதியாண்டவர்
- வீரபத்திரர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இறைவா உன்மீது உன்னருளால் யானியற்றும்
மறையான மந்திரப் பாக்களைப் பாதார
விந்தம் பணிந்தே சமர்ப்பித்தே இரந்து
வந்திக்கின்றேன் அருள்வாயே திரு...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளைப் பிள்ளையார்

வெள்ளைப் பிள்ளை என்றெழுந்தே
வந்தாய் ஆனை முகன்நீயே
அள்ளித் தந்தாய் அருள்நிதியை
ஆறு முகனின் சகோதரனே
வள்ளிக் கருளி னாய்நீயே
வரம்பு இல்லா அருளினையே
வள்ளன் ஆகவே வந்தாயே
வற்றா ஆறாய் மகிழ்வைத்தா

மக்கிக் கிடங்கின் றெழுந்தாயே
மன்னா எங்கும் நிறைந்தாயே
அக்கம் அணிந்த சிவனவனின்
அகத்தில் இருந்தே எழுந்தாயே
அக்கி நீக்கி அருள்கின்றாய்
அகநாட் டிறைவா விநாயகனே
அக்கம் பக்கம் நீதானே
அருளி வழிகாட் டுகின்றாயே

சித்தி ரையில் தேரேறி
சித்தி களையே நல்குவாயே
சித்தி முத்தி அருகிருக்க
சிறப்பாய் எழுந்த விநாயகனே
புத்தி வழங்கி உயர்த்தியே
புதுமை புரியும் நாயகனே
முத்தி தருவாய் ஆனைமுகன்
முன்னே வந்தே ஒளிர்ந்திடவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பால் உன்னை நாடிவரும்
அழகிய தெருவில் வசிப்போர்கள்
என்பும் உன்னை நினைக்குமே
எங்கள் இறைவா வெள்ளையனே
கன்னல் கலந்தே படைப்போமே
கற்கண் டையும் விரும்பிஉண்ணும்
அன்பன் செங்குந் தவீதியிலே
அருளு டனேயே உறைந்தானே.

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகபூசணி அம்மன்

ஆழி சூழ்ந்த தீவினிலே
அம்மா உன்னின் அருளாலே
மேழி சிறக்கும் சீர் மிகுந்தே
மேகம் பொழியும் மாரியாலே
ஊழி வெல்ல அற்புதமாய்
ஊனை உருக்கி வழிபட்டே
பூழில் சிறந்து வாழலாமே
பூத்த தாய் உன்னருளால்

காத்து அருள் புரிகின்ற
கருணை வெள்ளம் காட்டாறாய்
ஏத்தி வழங்கும் மகமாயி
ஏணியாய் எம்மைக் காத்தருளும்
ஆத்தா கடல் சுழியிலுமே
ஆபத்து வராமல் பார்த்தருளும்
பூத்தே புவியை உன்னுள்ளே
பூடகம் ஆக வைத்தாயே

நயினை தீவில் நாகமாகி
நல்ல ஆட்சி புரிகின்றாய்
அயிலைப் புனைந்தே அமர்ந்தருளை
அன்பர் பெறவே இனிமையாயே
மயிலைப் போலும் அசைவாலே
மாயை நீக்கி அருளுகின்றாய்
பயிலும் பனுவல் தாண்டியுமே
பாடம் புகட்டி நிற்கின்றாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவனம் காக்கும் புவனேஸ்வரி
பூவாய் எழுந்தே பூமியிலே
சிவனின் பாதி என்றேயாய்
சித்தம் முழுதும் நிறைந்தாயே
அவலம் என்றால் நாமெல்லாம்
அழைக்கும் போதே தாயாகி
அவனி காக்க வந்தருள்வாய்
அகிலம் மகிழும் ஈஸ்வரியாய்

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் முருகன்

அழகன் முருகன் அருளாலே
அரிய சித்தி பெற்றெழுந்த
குழகெல் லாமே விண்ணேறி
குறிஞ்சி மலராய் வாசம்தந்
பழனம் முழுதும் பவித்திரமாய்
பச்சைக் கதிரால் செழித்தெழுந்தே
எழலைப் பெற்றே நல்லூரில்
எழிலி பொழிந்தே அற்புதமாய்

நீல வானே பூச்சொரிய
நீள நினைந்த அடியவர்கள்
ஆல மரமாய் உயர்ந்தெழுந்தே
ஆற்றல் மிகுந்த சேயாயே
வேலன் உன்னைச் சூழத்தான்
வெற்றிச் செல்வன் எழுந்துவந்தே
சாலச் சிறந்த அருளினையே
சனத்திரள் பெறவே வழங்கினாயே

வேழ முகத்தான் தம்பியுன்னை
வேங்கை யெல்லாம் பணிந்தெழுந்தே
ஆழக் கடலும் உன்னசைவில்
அலையை அடிக்க மறந்தேகி
ஈழ புரியை நோக்கின்ற
ஈட்டி எல்லாம் உடைந்தேபோம்
வீழ்த்த முடியா வீரத்தால்
வீறு கொள்ளும் முருகனாலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்வேல் கொண்டே வந்தவனே
சேவற் கொடியில் மிளிர்ந்தவனே
எவ்வி னையும் அணுகாமல்
எங்கள் குலத்தைக் காப்பவனே
வெவ்வர் நீக்கும் குளிர்ச்சியினை
வெள்ளம் போலே தருகின்றாய்
எவ்வம் நீக்கி எவ்வுதலை
எழினி போலே நல்கின்றாய்

செங்குந் தத்தால் செங்கதிரின்
செழிப்பைக் காட்டி விளைந்தபூமி
செங்குந் தர்கள் புடைசூழ்ந்தே
செவ்வான் வெளியில் சூரனையே
எங்கும் தப்ப விடாதடக்கி
எரியும் கணையை வீசினாயே
அங்கு மிங்கும் அவனுமேதான்
அலைந்து மாயை அழிந்தானே

அலங்கா ரமாக எழுந்தருளி
அழகில் பக்தர் மயங்கின்ற
பலமாய்த் திகழும் பாலனாகி
பாவம் புரியும் பாதகர்கள்
அலகில் குத்தி அழிவினையே
அளிக்கும் அருவம் ஆனாயே
உலகில் உன்னைத் தவிரஏதும்
உள்ள தென்ப தறியேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு திசையும் கோபுரங்கள்
நவிலும் அழகில் உயர்வினையே
ஆன்றோர் கண்டே பாடியெழுந்
தாற்றில் மூழ்கா அருட்பார்வை
மூன்று கண்ணாண் மைந்தா
முருகா நீயே சிங்கைநகர்
சான்றோர் தெய்வம் சிங்காரன்
சற்புத் திரனே பார்காப்பாய்

தீவின் சிரசில் அமர்ந்திருந்தே
தீமை அழிக்கும் ஆறுமுகன்
ஆவி ஏங்கும் அருளிற்கே
ஆற்றின் நீராய்த் தந்தருளும்
தாவிப் பிடிப்பேன் உன்னுடைய
தாள் காப்பாய் எங்களையே
தூவி நாளும் மலரினையே
தூபம் காட்டி வணங்குகின்றோம்.

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகா

### பல்லவி

மயிலேறி வருகின்ற வடிவேலன் சுப்ரமணி
மாங்கலத்தின் உருவாயே எழுந்தே

### சரணங்கள்

அலங்கார கந்தனாகி வள்ளியுடன் தெய்வயானை
அணியாக வீதியுலா வந்தே
இலங்கையின் சிரசாகித் திகழ்கின்ற யாழ்நகரில்
இலங்குகின்ற நல்லூரில் பக்தர்
சலனங்கள் தீர்த்தெழுந்தே திவ்வியமாய் மனங்களிலே
சஞ்சாரம் புரிகின்றாய் கந்தா
கலகங்கள் நீக்கிவந்த கடம்பனான சரவணனே
கற்பூர தீபத்தில் வந்தாய்

செருக்கினாலே வந்தவினை அழிக்கின்ற வேலவனே
சொர்க்கத்தில் வாழ்கின்ற முருகா
அரும்புகின்ற பாவங்கள் போக்கவேள நித்தமும்
அலைஅலையாய் திரண்டுவரும் பக்தர்
விரும்புகின்ற வாழ்வையருள் கின்றாயே உமைபாலா
விஞ்ஞானம் காணாத மெய்யே
தருவாகித் தரணியையே நிழலாகிக் காத்தாயே
தடந்தோளின் வலியாலே குகனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்தமுமே கடலலைபோல் திரளுகின்ற மனிதர்கள்
நினைவுகளின் அலைகளையே புரிந்தே
உத்தமர்கள் ஆசைகளைத் தீர்ப்பதற்கே தேரேறி
உலாவந்தே அருளுகின்ற கந்தா
எத்தலத்தில் இருப்பினுமே உனதருளின் மழையிலேயே
எப்படியும் நனைந்துவிட வந்தே
உத்தலத்தில் நல்லூரிலே நிறைகின்றார் மக்களெல்லாம்
உய்த்தருளை உவந்துவழங் கிடுவாய்

கார்த்திகையில் அவதரித்த கார்த்திகேயன் உனதருளில்
காலமெல்லாம் நனையவேண்டும் என்றே
ஆர்த்தெழுந்த அலைகளையும் கிழித்தெறிந்தே உன்நிழலில்
ஆறவந்த எம்மைப்பார் குமரா
கீர்த்தியினை நாள்தோறும் தந்தெம்மை ஏற்றிடு
கிழவனாகி வள்ளியையாட் கொண்ட
கூர்வேலன் உம்மைநாடி வந்தோமே எங்களையே
கூம்பும்நின் அருட்கடலில் ஈர்ப்பாய்

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தன்

அழகிய மயிலேறி வருகின்றாய் முருகா
அன்பான வள்ளி தெய்வயானையுடன்
சேவற் கொடியில் மிளிர்கின்றாய் முருகா
செங்குந்த வேலுடன்

தேரடி வீதியில் எழுகின்றாய் முருகா
பக்தர்களின் குறைதீர்க்கவே
தேமாப்பூவாய் மலர்கின்றாய் முருகா
ஈழவர் ஆசைதீரவே

சித்தர்கள் வாழ்ந்த மண்ணில் முருகா
சித்திகள் தந்தாயே
புத்திபுகட்டி மனிதர்களை முருகா
பூவாக மாற்றினாயே

அற்புதங்கள் நிகழ்த்தியே முருகா
அரோகரா என்றாயே
ஒலிக்கின்ற ஒலியிலேயே முருகா
நீயே வந்தாயே

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலங்காரக்கந்தன்

**பல்லவி**

பொய்கை மீதில் சிவனுடைய
பார்வை யாலே எழுந்தவனே

**சரணங்கள்**

பொங்கும் அருளை அள்ளிவீசும்
பொன்னின் உருவே நித்தமுமே
மங்கா அழகுத் திருவுருவை
மனதில் நினைந்தே வாழுகின்ற
எங்கள் துயரைத் துடைத்தழிக்க
ஏகமாய் எழுந்த அற்புதனே
தங்க ரதத்தில் ஏறிவரும்
தத்து வத்தின் பொருளேநீ

நான்கு திசையும் உன்னுடைய
நல்ல அருளைப் பாடுகின்ற
ஆன்றோர் நிறைந்த ஈழத்தில்
அன்றும் இன்றும் என்றுமேயுன்
ஆன்றல் பரவி இதயங்கள்
அன்பால் நிறைந்தே நல்லபல
ஆன்மாக் களாலே நிறைந்துள்ள
அகிலம் உனதின் அருளாலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவல் கொடியைக் கொண்டெழுந்தே
செக்கச் சிவந்த உருவிலேயே
ஏவல் புரியும் அரக்கர்கள்
எறியும் வில்லை உடைத்தெழுந்தே
காவல் புரிந்த கார்த்திகேயா
கணமும் உன்னின் அருளாலே
பாவம் நீங்கி பார்மேலே
பாரி போலே வாழ்கின்றோம்

தந்தைக் குபதே சத்தினையே
தந்த மைந்தா அற்புதமாய்
விந்தை பலவும் புரிந்தெழுந்தாய்
வியனு லகிலே சிவமைந்தா
பந்தைப் போலே தாக்கவந்த
பாவம் எல்லாம் துடைத்தழித்தே
எந்தை முருகன் நீயெம்மை
ஏணி ஆக ஏற்றினாயே

கடலில் விழுந்த துரும்பாயே
கவலை கொண்ட மானிடர்கள்
அடவி உள்ளே புகுந்தெழவே
அதர்வை யின்றி தவித்ததாலே
இடரை நீக்க இன்பமாக
இனிமை உடனே எழுந்தாயே
விடத்தை முறிக்கும் மருந்தாகி
விரும்பி வந்தாய் நல்லூரில்

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தன்

## பல்லவி

கந்தன் துணை இருக்கும் இனி
கந்தையா உன்னை வேலால் காப்பானே

## அனுபல்லவி

ஆதவன் போலே ஒளிரும் முருகா
காதலின் வலியை அறியாயோ நீ

## சரணம்

கவலை புகுந் தயர் மனமே
சிவனின் மைந்தன் அருள் உண்டே
அவனின் நிழலில் தானே தினமும்
கவணாய் வாழ் கின்றாய் நல்லூரிலே

சிவலைக் கடவுள் சேயோன் தினமுமே
சிவந்த வேலால் காத்தே எம்மை
அவனியில் சிறக்க வைப்பான் எப்போதும்
அவன் இருக்க துயரேனோ நல்லூரிலே

மயிலில் பறந்தே வந்தெம்மை காப்பானே
அயிர் கூடவே தப்பா தவனிடம்
அயில் கொண்டான் எம்மை ஆட்டுவித்தே
அயினி தந்தே காப்பானே நல்லூரிலே.

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் முருகா

### பல்லவி

இன் னுயிர் ஈந்த வள்ளலே
இன் னுயிர்க் காவலனே

### அனுபல்லவி

மின்னி வருகின்ற வடிவேலைக் கொண்டவனே
என்துயர் தீர்க்கவே வருவாயே ஜயனே

### சரணம்

தேவர் குறையினையே கேட்டெழுந்த குறிஞ்சிமலையான்
தேரடியில் வந்தெம்மை காக்கவென்றே எழுந்தருளியே
பாவம் போக்கின்ற வேலையுடையான் நல்லூரிலே
பவனி வருகின்ற அழகிலே சொக்கிடுவோம்

சித்தர் எழுந்தேவந் உன்னுடைய காலடியிலே
சித்தி பெற்றனரே முருகையாவின் அருளாலே
முத்தி பெற்றவரும் திருவுருவைக் காணவேண்டி
முயன்றே வருவாரே நல்லையம்பதி எழிலிலே

ஆலமரம் போன்றெழும் அருள்நிழலில் பக்தர்கள்
வேலவன் பாதத்திலே வீழ்ந்திருக்க நானோ
காலம் முழுவதுமே உன்னடியில் சரணமடைந்தேன்
கவலை தீராயோ கந்தவேளே நல்லூரிலே

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகுக் கந்தா

## பல்லவி

அழகுக் கந்தா நாளுமேநீ
அன்பைப் பொழிந்தே வருகின்றாய்

## சரணங்கள்

காவில் எழுந்த கனகவேலே
கந்தா கடலைக் கடந்தேவந்
ஆவல் நிறைந்த உயிர்களிலே
அகத்தில் திருவாய் மிளிர்ந்தாயே
பூவில் மணமாய் வீசுகின்றாய்
புலவர் சிந்தை யுட்புகுந்தே
நாவில் வேலா என்றேதான்
நவிலும் தினமும் சரவணனே

இனியன் நீயே எப்பவுமே
இனிமை தந்தே காப்பாயே
கனியின் சுவையாய் தித்திப்பாய்
கந்தா பாரில் உயிர்களிலே
தனிமை நீக்கி குடும்பமாயே
தனத்தைப் பெற்றே வாழவைப்பாய்
பனியாய் வந்தே செழிக்கவுமே
பகலைத் தருவாய் சரவணனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயக்கம் நீக்கிஅ ருள்வாயே
மங்கல வாழ்வைத் தருவாயே
தயக்கம் இன்றி நானும்முன்
தாளைப் பணிந்தேன் காப்பாயே
உயர்வே நாளும் தந்தருளும்
உன்னால் மனதில் மகிழ்வினையே
அயர்வில் லாமல் பெற்றெழவே
அருளைத் தருவாய் சரவணனே

சேவற் கொடியைக் கொண்டவனே
சேயோன் நீயே அருட்கடலே
பாவம் போக்கும் பகலவனே
பனியில் நனைந்த மலராயே
மேவல் கூட்டும் அழகனேநீ
மேரு மலையின் வாசனேநீ
ஏவம் நீக்கும் மருந்தாயே
எதிலும் நிறைந்தாய் சரவணனே

காதல் தந்தே மகிழவைப்பாய்
கணமும் உன்னால் மனிதரெல்லாம்
மோதல் இல்லா வாழ்விலேயே
மேதம் புரிந்தே இறைநாமம்
ஓத நாளும் சீர்பெற்றே
ஓமெ னும்மந் திரத்தாலே
சாதல் இன்றி முற்றுமுணர
சால்பை அருள்வாய் சரவணனே

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டநாத சிவன்

நல்லை நாய கியுடனுறை
நல்லை நாதர் எங்களது
தொல்லை நீக்கும் நடராஜர்
தொங்கும் பாவம் தலையிலேயே
அல்லல் தராமல் காக்கின்ற
அன்பே சிவமாய் உருவாகி
நல்லை நகரில் உறைந்தவரின்
நல்ல புகழைப் பாடுவோமே

சொல்லில் சிறந்த நல்லைநாதர்
சொக்க நாதர் புகழினையே
பொல்லா வினையைத் துரத்துகின்ற
பெருமை கொண்ட சிவனுடைய
வல்லார் அவரின் பாதத்தினையே
வலிந்தே சென்று வணங்குகின்ற
நல்லார்க்கு நாளும் எல்லாமும்
நவின்றே காக்கும் சட்டநாதர்

சங்கி லிதோப்பில் எழுந்தருளி
சத்தி யத்தின் உருவாயே
திங்கள் சுமந்த சிரசுடையோன்
தித்திக் கின்ற அருளுடையோன்
கங்கை சுமந்த சடாமுடியோன்
கணங்கள் தலைவன் சிவபிரானே
நங்கை பாகம் அமர்ந்தோனே
நல்லை நகரின் பெருந்தெய்வம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக அமைவின் அடிநாதம்
உற்பத்தி செய்தே உடனுறையும்
குலவன் நீயே சட்டநாதன்
குலாவை வழங்கும் அன்பனாகி
அலரை அணிந்த கழுத்துடையான்
அலவு நீக்கி அருளுகின்ற
அலர்ந்த தாமரை இறைவனேயே
அலர வனுமே உன்கீழாய்

சட்டை நாத சித்தரது
சமாதி மேலே அமர்ந்தாயே
சட்ட நாதர் எனப்பெயரை
சரித்தி ரத்தால் பெற்றாயே
எட்டுத் திக்கும் நிறைந்தாயே
ஏறு மீதில் எழுந்தஇறையே
அட்ட திக்கு பாலகரும்
அண்ணல் உன்றன் திருவடியில்

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொன்றலடி ஞான வைரவர்

கொன்றை மரத்தின் கொன்றைப் பூக்கள்
என்றும் சொரியவே எழுந்தரு ளினாயே

எழுந்த உன்றன் எழுச்சியால் ஊரைக்
கழுகு போலே காத்தாய் வைரவா

ஞான வைரவா ஞானம் தந்தாய்
கானல் இல்லா கற்பக வாழ்வையே

தந்த எம்பிரான் தங்கமாய் ஜொலித்தே
ஏந்தல் போலாய் ஏறி வந்தாயே

நாயின் மீதே நகர வலமே
கோயி லிருந்தே கோவென வந்த

வீரபத் திரரே வீரத் தினுருவாய்
ஈரமில் மனிதர் இதயத் தினையே

கனிய வைக்கும் காட்டா றெனவே
நனிசிற ந்தாயே நல்லை நகரில்

பாய்ந்தே வந்த பகலவனே உனதருள்
ஓய்ந்தே விடாமல் ஓங்கா ரமாக

ஒலித்தே இருக்குமே ஒழிதல் இல்லாய்
கலியினைத் தடுத்தே காக்கவே எழுந்தாய்

வைரவா போற்றி வைரம் பதித்த
வைரவா சூல வைரவா போற்றி.

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநெல்வேலி வாலையம்மன்

திருநெல் வேலிப் பதியினிலே
தித்திக் கும்தேன் ஆகவெழுந்
திருவாய் எம்மைக் காக்கும்தாய்
திகட்டா இனிமை தந்தாயே
அருளின் மழையை எம்மீதே
அள்ளித் தெளித்தே குளிர்விக்கும்
அருமை நிறைந்த அற்புதமே
அழகின் வடிவே வாலையம்மா

அருவும் உருவும் ஆஅகியே
அந்த மில்லா தாயாகி
கருவாய் எம்மில் தோன்றும்தாய்
கன்ன லாக தித்திக்கும்
தருவாய் நீயே ஆனதாலே
தந்தாய் அருளினை நிழலெனவே
இருளைக் களைந்தே எம்மீதே
இன்ப ஒளியை பாய்ச்சினாயே

அழகுக் குமரி என்றாயே
அழியா அழகின் உருவானாய்
குழகுப் பெண்ணே குவலயத்தை
குழங்கல் எனவே கொண்டாயே
தழலைப் போன்றே எரிக்கின்ற
தவதா யத்தில் காப்பாயே
கழலை அணிந்த பாதத்தாள்
கரும்பாய் எழுந்தாய் வாலையம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளைக் காரனின் வெப்பின்நோய்
வெட்டி அருளி மன்னித்தாய்
கொள்ளைக் காரன் அவனெனினும்
கொள்கை மாறா தாயாகி
அள்ளிக் கொடுத்தாய் அருளினையே
அகிலம் ஆளும் ஈஸ்வரியே
தெள்ளித் தெளித்தாய் அத்தனையும்
தெவிட்டா மலேயே எமக்கென்றே

கண்ணைப் பறிக்கும் ஒளியுருவே
கருத்தாய் நிறைந்த அம்பிகையே
தண்மை கொடுத்தே புவியினையே
தரமாய் உயர்த்தி அதனுள்ளே
திண்மை எனவே நிறைந்தாயே
தின்மை ஒழித்த மீனாட்சி
பண்ணாய் எழுந்தே செங்குந்தர்
பதியில் அம்மா அருள்நிழலே

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துர்க்கை

சிங்க மீதில் எழுந்தருளி
சிங்கா நகரின் முழுமையுமே
மங்கை நீயே வந்தாயே
மண்ணில் பெற்றோம் வீரத்தை
எங்கும் இருந்த பயமழித்தே
எதிலும் வெற்றி காட்டினாயே
பங்கம் இல்லா வாழ்வளித்தே
பாரில் எம்மை நிமிர்த்தினாயே

வீரம் நிறைந்த காளியாயே
விண்ணில் உயர்ந்த தாயேநீ
ஈரம் கொண்ட நெஞ்சுடையாள்
ஈழத்தில் எழுந்த துர்க்கையாயே
ஆரம் அணிந்த கழுத்துடையாள்
அம்மா உன்றன் அருளாட்சி
சூரத் தினாலே நாமெல்லாம்
சூம்பு தலின்றி வாழ்கின்றோம்

தீமை யினையே பொசுக்கின்ற
திறமை கொண்டாய் தாயேநீ
ஊமை எனவே வாழ்ந்தஎம்மை
ஊரே மெச்சிப் பேசவைத்தாய்
ஆமை என்றே ஊர்ந்திருந்த
ஆட்கள் சக்தி யினைப்பெருக்கி
வாமை நீயே எங்களையே
ஏரின் வலியால் சிறக்கவைத்தாய்

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்குமி

செந்தா மரையில் வீற்றிருக்கும்
சிவந்த நிறத்தாள் பூமியிலே
செல்வத் தினையே வழங்குமிறை
நல்ல அரசர் உனைநாடிச்
சென்றே பெற்றார் பெரும்புழியை
செகத்தில் நீயே தினந்தோறும்
செல்வோம் செல்வோம் என்றேயே
சொல்லி இருப்பாய் தேவியேநீ

உன்னை தங்கள் சொந்தமாக்க
உலகோர் முயன்றே கொண்டிருப்பார்
அன்றும் இன்றும் என்றைக்கும்
அவர்கள் அடிமை உன்னிடத்தில்
அன்னை நீயே அனைத்தினையும்
அள்ளி வழங்கும் இறைத்தாயே
உன்றன் அருளைப் பெறாவிடிலோ
உலகில் வாழல் பயனிலையே

உள்ளம் கையால் காசுசொரி
உண்மை கண்டே உலகத்தோர்
உள்ளத் திலேநீ குடிகொண்டாய்
உவகை பொங்க உன்னிடமே
உள்ள செல்வத் தினைப்பெறவே
உன்னைத் தேடி ஓடுகின்றார்
வள்ளன் மையில் உயர்ந்தவளே
வாரி வழங்கி விடுவாயே

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரஸ்வதி

கல்வித் தெய்வம் தாமரையில்
கண்ணால் பார்த்தே மெய்மறந்தே
தில்லைக் கூத்தனின் திருவருளால்
திகட்டா இன்பம் யான்பெறவே
கல்வித்தாயே உன்னைநாடி
களங்கம் அற்ற மனதுடனே
எல்லை கடந்தும் வந்தேனே
எட்டா அறிவைப் பெற்றுயர

தேனாய்த் தந்தே அறிவினையே
தென்றல் எனவே தழுவினாயே
மானாய் அழகு கொண்டதாயே
மங்கா அறிவுக் கடலானாய்
கான கத்தி லும்பக்தர்
கருத்தொ ருமித்தே வாழ்வாரே
வானத் திலுமே பறப்பார்கள்
வஞ்சி நின்றன் பக்தர்கள்

ஆய கலைகள் அனைத்தையும்
ஆத்தா உன்னுள் அடக்கினாயே
ஈயல் புரிந்தே எம்மையுமே
ஈட்டி எனவே உருவாக்கிடு
சீய னாயே சீலமாயே
சீவி யத்தை இனிமையாக்கி
தேயம் எல்லாம் புகழுடனே
தேய்தல் இன்றி வாழ்ந்திடவே.

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமால்

அனந்த சயன மூர்த்தியாயே
அனுக்கிர கத்தை நல்கின்றாயே
சனந்த னாக எழுந்தருளி
சகல பாக்கி யங்களுமே
தனத்து டனேயே வழங்குகின்ற
தடந்தோள் உடையாய் போற்றிபோற்றி
கனத்த மனதைக் குளிர்விக்கும்
கருணை வள்ளல் திருமாலே

ஆண்டாள் மனதின் குறைதீர்த்த
அன்பன் நீயே பெருமாளே
வேண்டும் வரத்தை மழையெனவே
வாரி வழங்கும் திருமாலே
ஆண்டே புவியில் அவலங்களையே
அழிப்பாய் போற்றி அருள்நிதியே
ஆண்டெல் லாமே வழங்குகின்ற
ஆனந்த மூர்த்தி போற்றிபோற்றி

பாம்பில் உறைவாய் போற்றிபோற்றி
பாரின் தலைவா போற்றிபோற்றி
ஆம்பல் பூவை அணிவாயே
அரசே எங்கள் மன்னவனே
சோம்பல் இல்லா உலகினையே
சொர்க்கம் போல மாற்றுவாயே
சாம்பல் கூட உயிர்க்குமே(எ)
சர்வா உன்றன் அருளாலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுகங்கள் தோறும் அவதரித்தாய்
யவனம் கொண்ட பெருமாளே
அகங்கள் தோறும் நீதானே
அகிலம் நிறைத்தாய் மாலவனே
இகத்தில் பரத்தில் எல்லாமும்
இங்கே காட்டி எழுந்தாயே
யுகங்கள் தோறும் அதர்மத்தை
ஊழி காட்டி அழித்தாயே

கண்ணண் என்றே காரிகைகள்
கண்ணாய்த் திகழ்ந்தாய் திருமாலே
பண்ணாய் எழுந்தே குழலுடனே
பாரின் மகிழ்வில் இசைத்தாயே
மண்ணில் மூன்று அடிகேட்டே
மண்ணுள் அரக்கர் அகம்பாவம்
மண்ணாக் கினாயே வாமனனாய்
மன்னா எங்கள் இறைநீயே

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஞ்சநேயர்

திருமால் பக்தன் ஆஞ்சநேயர்
தித்திக் கும்மொ ழியுடையானே
அருளா ளன்நீயே ஆஞ்சநேயா
அன்பில் உயர்ந்த ஆஞ்ச நேயா
குருவி போலே பறந்துவரும்
குன்ற னையான் ஆஞ்சநேயா
பருத்த தோளை உடையானே
பழுத்த அன்பில் நிறைந்தவனே

சீத்தா பிராட்டி யினைக்காக்க
சீறி வந்தாய் ஆஞ்சநேயா
ஆத்தா அருளால் அண்ணலுடை
அனுக்கி ரகத்தைப் பெற்றவனே
காத்தாய் புவியை கவியுருவில்
கானகம் தாண்டி வந்துயர்ந்தாய்
ஆத்தா போலே அருளினாயே
அன்பின் உருவே ஆஞ்சநேயா

நெஞ்சில் இராமன் உருவினையே
நித்தம் சுமந்த பெருமானே
வஞ்சம் இல்லா இனத்தோனே
வச்சி ராயு தம்ஏந்தி
கஞ்ச மில்லா கருணையாலே
காசி னியிலே மனிதர்கள்
நெஞ்சம் வேண்டு பவற்றினையே
நல்ல வண்ணம் அருளுபவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீ விமலை யினைக்கையாலே
சாய்த்தே வந்தாய் பராக்கிரமா
அஞ்சா வீரா ஆஞ்சநேயா
அடவி தனிலே வசிக்கின்ற
அஞ்ச னைதனைத் தாயாக
அடைந்த புண்ணி யனேபோற்றி
தஞ்சம் என்றே வந்தவர்க்கே
தாயா னவனே போற்றிபோற்றி

வெற்றிக் கடவுளே ஆஞ்சநேயா
வெற்பைப் பெயர்த்த வீரனேநீ
வெற்று இலையின் மாலைக்கே
வேண்டிக் கேட்கும் வரங்களையே
வற்றா நதியாய் வழங்குகின்ற
வனத்தின் கருணைக் கடலேநீ
பெற்ற தாயாய் சீத்தாவை
பெற்ற இறையே ஆஞ்சநேயா

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேளாதோப்பு முத்துமாரி அம்மன்

இருபா லையின் இறைவி நீயே
முருகர் தாயே மூத்தாம் பிகையே
மருத நிலத்தின் மங்கா ஒளியே

எவர்க்கும் அருளும் எங்கள் தாயே
உவரி லாத உலகின் அரசியே
பவத்தை அழிக்கும் பழுமணி ஒளியே

முத்து மாரி முத்தைப் போலே
பத்து முகம் பகர்ந்தே பாரிலே
வித்தாய் முளைத்தாய் விண்ணின் ஒளியே

வேளா தோப்பில் வேங்கை மீதே
சோள மணியின் சொர்க்கத் திலிருந்
ஆள வந்த ஆட்சி ஒளியே

கழலைப் பணிந்தே களனியில் இறங்கும்
உழவர் வாழ்வை உயர்த்தி அவரை
கிழவர் ஆக்கும் கிளியின் ஒளியே

ஆல மரத்தின் அடியில் அம்மா
கால தேவதை கருநிறக் கூந்தல்
பாலம் போலாய் பகரும் ஒளியே

ஒளியாய் ஒலியாய் ஒலிக்கும் நாதமும்
விளியும் நீயாய் விழிக்கும் உலகில்
அளிப்பாய் கருணை அருளின் ஒளியே

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவடியாட்டம்

காவடி எடுத்தே கந்தா உன்றன்
மாவடி தேடி மந்திரம் ஓதியே

ஓங்கா ரவேளே ஓம்எனும் பிரணவா
மங்கா ஒளியுடை மாணிக்க வேலே

வேலா வந்தாய் வேங்கை என்றே
காலால் கடந்தே கனகவேல் பாதம்

பாத பங்கயம் பணியவே கந்தா
ஆதவன் கதிர்கள் அடித்தே வருத்தவே

வருத்தம் போக்க வச்சிர வேலையே
அரும்பும் மலர்கள் அனைத்தும் கொண்டே

கொண்டே வந்தோம் கொம்புத் தேனை
வண்டாய் அருந்தி வரமருள் முருகரே

முருக பக்தர் மூலை எல்லாமும்
மருள் நீக்கி மங்கல வாழ்வை

வாழவே மயில் வாகனன் அருள்வான்
ஆழக் கடலிலும் அயிலில் வருமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருந்தா வாழ்வே வழங்கவே வந்தாரே
குருவாய் குமரேசர் குன்றில் இருந்தே

இருக்கும் காவடி இனிக்கும் முருகரை
தருவாய் அருளை தருகிற நேசனை

நேசனை வள்ளி நேசனை பள்ளி
வாசனை பாடியே வணங்கி ஆடியே

ஆடும் காவடி ஆடியே அவனையே
நாடும் நாமும் நாடியே செல்வோம்

செல்லும் போதே சொல்லும் நாமம்
செல்லக் கதிரின் செங்குந் தனையே

செந்தில் ஆண்டவர் சிவந்த நாதரை
வந்தித் தேபாலின் வடிவான பாலருக்கு

பாலில் காவடி பன்னீர்க் காவடி
பாலரை நினைந்தே பாடி ஆடி

காவடி யாலே கந்தரை வணங்கி
தேவடி பணிந்தே தேவனைப் போற்றுவோம்

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செங்குந்த குளநகர்

செங்குந்த குளநகர் வாசன் - தமிழ்
தேறும் கந்தையாவின் தாசன் சொல்லும்
உலகுஉயர்த்தும் மதுகைக்கவி யதனைப் புதுமை
இணைத்துப்புனை
நேசன் வெற்றி வீரன்

அன்ன அழகொரு பாகன் ஏறியே
அமர்ந்து வரும்உலக பூசன்அவன்
அருளேதரு சட்டநாத பதிகோயிலின்
அருமையான நிலை
ஆட்சி சொல்வேன் பூவே

சந்நிதியிலிருக்கும் தம்பம் மேகத்தில்
தழுவி வருகின்ற கம்பம் எனும்
செந்தாமரை அழகியினை முடிசூடி
தன்பாகத்திலே
தாங்கும் சிறந்தோங்கும்

சன்னத மாகி எஞ்சி பொறுக்கா
தலைவர் நகரில் மிஞ்சி அக
துயரமானது தருவோரைத் துரத்த
விழுந்தேஓழியும்
துயரம் மின்னி அயரும்

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானக் குழந்தை

ஞானக் குழந்தையாகி - முருகன்
ஞானத்தைக் கொண்டு தருவான்
ஞானிகள் போற்றும் - அழகன்
ஞானப்பழம் கொண்டு வருவான்

நல்லூரிலே ஆட்சி புரியும் அவன்
நல்லகாரியங்கள் பல நல்கிடுவான்
நல்லவண்ணம் ஆண்டுவரும் கந்தன்
நன்மைகள் பல தந்திடுவான்

வேலெடுத்து வரும் குமரன்
ஆலாகி நிற்பான்
வேங்கை என்றேசரவணண்
எழுந்தே நிற்பான்

மாளும் உலகைத் தாங்குவான்
ஆளும் அவனே
நாளும் அவனியை சற்குணண்
காப்பான் அவனே

பன்னிரு கையாலே ஆறுமுகன்
பாரைக் காப்பானே
மூவிருமுகம் உடையான்
மூவுலகும் காப்பானே

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயில் மீதேறி வந்த...

மயில் மீதேறி வந்த அழகனே
அயில் எறிந்தே
அரக்கர் குலம் அழித்த வீரனே
சரம் எறிந்தே

வந்தவர்கள் சரங்களினை முருகனே
பொடியாக்கி எழுந்தாயே
நொந்தவர்களை வாழவைப்பாய்
கந்தனே
நம்பியோரைக் காத்தாயே

மலைமீதினில் பறந்தே கலாபமாய்
இலைமீதில் நீராயே
மாயங்கள் புரிந்தாயே மனோகரனே
காயங்கள் நீக்கினாயே

நல்லதெல்லாம் தந்தருளுவானே
நல்கைக்கந்தனே
நல்லைநகரில் அல்லல் அறுத்தான்
நல்ல முருகனே

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழ் வடிவனே...

அருட்கடல் முருகன் நீயே
அருள்நிதி தந்தெம் மையே
திருவினால் ஆட்சி காட்டி
தீயினைப் போலே தோன்றி
தருவென நிழலைத் தந்தே
தமிழிறை நீயே இனிக்கும்
கருவினை நெஞ்சில் தந்தே
காக்கிற அப்பன் கந்தன்

முத்தமிழ் வடிவில் வந்தே
முக்கனிச் சுவையாய்க் கந்தா
முத்தியின் வடிவாய் தோன்றி
மூவுலகும் காட்டி அப்பன்
எத்துணை துயரம் வந்தால்
எப்படி போகும் என்றே
காத்தருள் புரியும் கந்தன்
கனகவேல் முருகன் அப்பன்

தமிழினுள் இசையாய் இயலும்
தரமிகு தொன்மைப் பாடல்
அமிழ்ந்தெழு அணியின் ஆடல்
இவையுமாய்க் காட்டும் கந்தன்
குமிழ்விளக் கினையே ஏற்றி
குமரனையே வேண்டி நிற்கும்
கமிழுகிற மலரின் வாசம்
கரும்பினைப் போலே வீசும்

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதிக்கந்தன்

வல்லையின் கோழியே பாடி எம்மை
வாவென்றே கூப்பிடுதே முருகனை வணங்கிக்கூடி
அல்லலைத் தொலைத்தே ஆடி மகிழ
அழகின் அற்புதத்தை கண்ணால் காணவாடி

நல்லூரில் இருந்தே நாடி நாம்
நடையாக நடந்தே சந்நிதிக் கந்தனைதேடி
தொல்லை எல்லாமே தாண்டி காண
தொலைவில் இருந்தே வருகின்றோமோடி

பாதையில் பலதுன்பம் கண்டே எம்
ஆதியில் செய்த பாவத்தை ஆற்றிலாடி
ஊதையில் பறக்க விட்டே தெளிந்
ஊற்றாக பிரவாகிக்க வந்தோமோடி

வேலாகி நின்றே மாவடி யிலே
வெட்டுப் போக்கின்ற பூவரச மரத்தடி
மூலாநீ நிறைந்தாய் ஆடி
முன்னேவந்த சித்தா உன்றனை நாடி

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி முருகன்

சந்நிதியில் எழுந்த கந்தன் அவன்
சங்கநிதி அள்ளித்தரும் வேலன் பக்தர்
தங்கமென நினைத்தாலே தவிக்கவி
டாதருளுவான்
கடம்பன் வெற்றி முருகன்

எந்நிதியும் வழங்கியே எம்மை காத்து
எங்குமே எழுந்தானே அம்மை தான்
எடுத்தணைத் தன்பனாய் வந்தருளும்
தொண்டமனாற்
றழகன் இனிய வேலனே

ஆற்றங்கரை யானழகில் உயர்ந்தான் இன்ப
ஆனந்தமாய் இருக்கவே எழுந்தான் அவன்
இயற்கையை விரும்பும யில்வாசனே
மருதக்காட்டில்
உயர்ந்தான் மாங்கா ஒளியுடன்

வேற்று நாட்ட வரையுமே காப்பான்
வேலினையே நம்பிவந்தே வேண்டுவார் அருள்
வேண்டுபவர் வேண்டுகிற வரங்களைத்
தந்தருளும்
வள்ளி மணாளன் முருகன்

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியாண்டவர்

வீரவாகு சூரனைத்தான் வதைக்கவேள வந்தே
வீரமாக கழலினையே பதித்த
ஈரமான மண்மீதில் ஆற்றினரு கிலேயே
ஈழத்தின் சிரசிலேயே தேவன்
கோரமான அரக்கர்கள் பாவங்கள் அழித்தாய்
கார்த்திகேயா உன்றன் கழலில்
பாரத்தினை இறக்கின்றோம் எங்களையும் காப்பாய்
பார்போற்றும் செந்திலாண்ட வரே

பூவரச மரநிழலின் கீழாயே முருகா
புதுமைகொண்ட வனேஎ முருகா
ஆவாரம் பூக்கொண்டே வந்திக்கும் பக்தர்
ஆர்ப்பரித்தே அலைகடலாய் வந்தே
தேவாஉன் கழலினிலே சரணமாகி கந்தன்
தீர்த்தத்தில் நனைந்தெழுந்தே நாம்
மூவாமு குந்தனது மருகனான உன்றன்
மூப்பினையே அகத்திலிருத் தியதால்

மருதக்காட் டினுள்ளேயே அழகனான நீயே
மருத்தாக வந்தெம்மைத் தழுவி
மருட்கையினைத் தருகின்றாய் மலயத்தி லிருந்தே
மங்கலத்தின் உருவெனவே வந்தாய்
அருட்கடலே பாவிகளின் துயரினையே துடைக்க
அருள்நதியைத் தந்தெம்மை காக்க
தருவாயே எழுந்தாயே தொண்டமனாற் றருகே
தழலினையே ஒத்தாயே கந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்குந்த மாகவேயே எழுந்தாயே சந்நிதிச்
செம்மலேநீ தேறுதலைத் தந்தாய்
பங்குனனும் வந்துன்னை வந்திக்க விரும்பி
பாரிற்கே வந்திடுவான் அழகா
வங்கியத்தை இசைக்கின்ற பக்தராலே சூழ்ந்த
வச்சிரவேல் நாயகனே முருகா
பங்கெனவே தோளிரெண்டும் அன்பர்க்கே தந்தே
பலமான அன்பினாலே உயர்ந்தாய்.

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரபத்திரர்

சிவனின் சினத்தில் எழுந்தவனே
அவனின் உருவே வீரபத்திரர்
சிவந்த தழலின் நிறத்தவனே
சீலம் மிக்க ஆண்டவனே
அவனி காக்க வந்தாயே
அன்பின் உருவே ஆணவத்தை
எவனும் கொண்டே உயிர்களையே
ஏறி மிதிக்க விடாவைரவா

தக்கன் யாகம் அழித்தாயே
தரணி யினையேகாத்தாயே
பக்தர் துயரைத் துடைப்பாயே
பாரில் நீயே தின்மையழித்
திக்கெல் லாமும் நிறைந்தாயே
தீரன் சிவனின் அவதாரம்
முக்கா லத்தை உணர்த்துவாயே
முதிய கால வைரவரே(எ)


ஞான கால வைரவராயே
காலம் முழுக்க நிறைந்தாயே
தானத் திலேயே சிறந்தவராய்
தரணி காத்த இறைவரே(எ)
கான கத்தி லுமேஉன்றன்
கருணை காட்டி காத்தாயே
வானம் முழுதும் நிறைந்தாயே
வைரவா போற்றி போற்றிபோற்றி

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மெகா பதிப்பகம்
021 221 7939

ISBN 978-624-98909-3-0

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org